கபடி உலகக் கோப்பை -2025ஐ வென்ற

# இந்திய மகளிர் கபடி அணிக்கு பாராட்டுகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, நவ. 26-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-

**டாக்காவில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் 3528 புள்ளிக்கணக் கில் சீன தைபே அணியை வீழ்த்தி, கபடி உலகக் கோப்பை 2025 ஐ வென்றுள்ள இந்திய மகளிர் கபடி அணிக்கு என் பாராட்டுகள்!**

**தொடர்ந்து இரண்டாவது முறையாக உலகக் கோப்பையை வென்றிருப்பது ஒட்டுமொத்த நாட்டுக்கும் பெருமித தருணம்!**

**சரியான ஆதரவும், முன்னேறுவதற்கான சூழலும் அமைந்தால், உலக அரங்கைத் தங்கள் வசமாக்க இயலும் என மீண்டுமொருமுறை இந்தியாவின் மகள்கள் நிரூபித்துள்ளனர்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது பதிவில் தெரிவித்துள்ளார்.

பத்திரிகையில் வந்த செய்தி உண்மையில்லை

# மாற்றுத்திறனாளிகள் நல ஆணையரகத்தில் மியூசியம் கேப்!

## தொடர்ந்து செயல்பட்டு வருகிறது!

சென்னை, நவ. 26-

மாற்றுத்திறனாளிகள் நல ஆணையரகத்தில் செயல்பட்டு வரும் மியூசியம் கேப் மூடப்படுவதாக பத்திரிக்கை பதிவில் வெளிவந்துள்ளது. மாற்றுத்திறனாளிகள் நல ஆணையரகத்தில் செயல்பட்டு வரும் மியூசியம் கேப் மூடப்படுவதாக வந்துள்ள செய்தி உண்மையல்ல. மாற்றுத்திறனாளிகள் நல ஆணையரகத்தில் செயல்பட்டு வரும் மியூசியம் கேப் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது என தமிழ்நாடு அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



திருவண்ணாமலையில் மறைந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.தர்மலிங்கம் அவர்களின் 39வது நினைவு நாளை முன்னிட்டு பொது மக்களுக்கு சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி நல உதவிகள் வழங்கினார். உடன் கழக மருத்துவ அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், எஸ்.பன்னீர்செல்வம், ப.கார்த்திவேல்மாறன், பிரியா ப.விஜயரங்கன், சு.ராஜாங்கம், தினேஷ் சம்பத், கல்பனா சம்பத், மீனா விநாயகம், ஆ.பழனி உட்பட பலர் உள்ளனர்.

சென்னை – மதுரையில் ஆடவர் ஹாக்கி ஜூனியர் உலகக் கோப்பை போட்டி

# வீரர்களை பொதுமக்கள் - ஹாக்கி ரசிகர்கள் உற்சாகப்படுத்த வேண்டும்!

### இராதா கிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டரங்கில் முன்னேற்பாடு பணிகளை பார்வையிட்டபின்

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பேட்டி!

**சென்னை, நவ. 26-**

**ஆடவர் ஹாக்கி ஜீனியர் உலக கோப்பை போட்டிகளை சென்னை மற்றும் மதுரையில் மைதானத்தில் நேரில் பார்வையிட்டு வீரர்களை உற்சாகப் படுத்த வேண்டும் - பொதுமக்கள், விளையாட்டு வீரர்கள், ஹாக்கி ரசிகர்களுக்கு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அழைப்பு விடுத்துள்ளார்.**

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மற்றும் ஹாக்கி இந்தியா இணைந்து நடத்தும் 14-ஆவது ஆடவர் ஹாக்கி இளையோர் உலகக்கோப்பைப் போட்டி, தமிழ்நாட்டில், சென்னை மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டரங்கம் மற்றும் மதுரையில் அமைந்துள்ள தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் ஹாக்கி விளையாட்டரங்கம் ஆகிய இரு இடங்களிலும் 28.11.2025 முதல் 10.12.2025 வரை சிறப்பாக நடைபெற உள்ளது.

இதனையொட்டி துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (24.11.2025) சென்னை மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டரங்கில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாட்டு பணிகள் குறித்து நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மைதானத்தில் பார்வையாளர்கள் அமர்வதற்கும், போட்டியில் விளையாட உள்ள பல்வேறு நாடுகளைச் சேர்ந்த விளையாட்டு வீரர்களுக்கான வசதிகள், மின் விளக்கு வசதிகள், பாதுகாப்பு ஏற்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு பணிகள் குறித்து அலுவலர்களுடன் நேரில் பார்வையிட்டு ஆய்வு



மேற்கொண்டார்.

மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டரங்கில் உள்ள டாக்டர் கலைஞர் பார்வையாளர் மாடத்தில் இருந்து வெளிநாட்டு அணியினர் பயிற்சி ஆட்டம் மேற்கொள்வதை பார்வையிட்டு மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து அலுவலர்கள் மற்றும் ஹாக்கி இந்தியா நிர்வாகிகளுடன் கலந்தாலோசனை மேற்கொண்டார்.

பின்னர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு :-

இராதாகிருஷ்ணன் ஸ்டேடியத்தில் அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கின்றன. அதை மேற்பார்வையிடுவதற்காகதான் வந்திருக்கின்றேன். அனைத்து விதமான பாதுகாப்பு வசதி, உணவு வசதி, போக்குவரத்து வசதி, தங்கும் வசதி இது போன்று அனைத்து வசதிகளும் செய்யப்பட்டிருக்கிறது.

வருகின்ற 28ஆம் தேதி சென்னை மற்றும் மதுரையில் போட்டிகள் தொடங்க இருக்கின்றது. மதுரையில் மாவட்ட ஆட்சித் தலைவர் ஏற்கனவே அங்கே பத்திரிக்கையாளர் சந்திப்பு நடத்தி டிக்கெட் குறித்து விளக்கி இருக்கிறார். டிக்கெட்டுகளுக்கு நல்ல டிமாண்ட் இருக்கிறது. பொதுமக்களிடமும், விளையாட்டு வீரர்கள், ஹாக்கி ரசிகர்களிடமும் கேட்பதெல்லாம், இந்த உலக கோப்பை ஜீனியர் ஹாக்கி பற்றி நீங்கள் நிறைய பேரிடம் சொல்லுங்கள். போட்டிகளை நேரடியாக வந்து பாருங்கள். இந்த போட்டியை உற்சாகப்படுத்துங்கள்.

ஹாக்கி விளையாட்டிற்கு எப்போதுமே, தென்தமிழகத்திலும் சரி, சென்னையிலும் சரி தமிழ்நாட்டிலிருந்து நிறைய ஒலிம்பிக் வீரர்கள் வந்திருக்கின்றார்கள். அவர்களுக்கெல்லாம் இந்த போட்டி புது உற்சாகத்தையும், உத்வேகத்தையும் கொடுக்கும் என்று நாங்கள் நம்புகின்றோம்.

இரண்டு வருடங்களுக்கு முன்பு ஹாக்கி ஆசிய கோப்பை போட்டிகள் நடக்கும் போது ஒவ்வொரு போட்டிக்கும் இங்கு இருக்கக்கூடிய தமிழ்நாடு விளையாட்டு மேம்பாடு ஆணையத்தின் (SDAT) விடுதி மாணவர்கள் அத்தனைபேரையும் இங்கு அழைத்து வந்து, அவர்களுக்கெல்லாம் இந்த போட்டியை நேரில் பார்ப்பதற்கான, இன்னும் சொல்ல வேண்டும் என்றால், அந்த வீரர்களுடன் பேசுவதற்கான வாய்ப்புகள் எல்லாம் ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்டது.

இந்த முறையும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாடு ஆணையத்தின் (SDAT) விடுதி விளையாட்டு வீரர்கள் அனைவருக்கும் அனைத்து போட்டிகளையும் இலவசமாக கட்டணமில்லாமல் பார்க்கும் வசதியோடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

SDAT ஹாக்கி விளையாட்டு வீரர்கள் அனைவரும் வந்து பார்க்கலாம். தமிழ்நாடு விளையாட்டு மேம்பாடு ஆணையத்தின் விடுதியில் இருக்கின்ற மற்ற விளையாட்டு வீரர்களும் வந்து இந்த போட்டிகளை பார்ப்பதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கிறது.

**மிகப்பெரிய போட்டிகள் நடத்தப்படும்!**

மிகப்பெரிய போட்டிகள் நடத்தப்படும் போது எல்லா மாநிலங்களுக்கும் கோப்பை அனுப்பப்படும். பல்வேறு மாநிலங்களுக்கும் உலகக் கோப்பை பயணம் மேற்கொள்ளப்பட்டது. கடந்த 10 நாட்களுக்கு முன்னர் டெல்லியில் நடைபெற்ற ஹாக்கி இந்தியா நூற்றாண்டு விழாவின்போதும் மாண்புமிகு மத்திய அமைச்சர் அவர்கள் கோப்பையை அறிமுகம் செய்தார்.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் ஹாக்கி உலகக்கோப்பை பயணம் மேற்கொள்ளப்படுகின்றது என்று தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, இந்திய ஹாக்கி சங்க பொருளாளர் சேகர் ஜெ.மனோகரன் உள்பட அரசு அலுவலர்கள், ஹாக்கி விளையாட்டு வீரர்கள் ரசிகர்கள் கலந்து கொண்டனர்.

